MADRAS

உ

அகில இந்திய

# விக்கிரகங்கள் மகாநாடு.

## இரண்டாம் பாகம்.

சுக்கில-வருஷ ஆனி-மீ 16உ (16—8—1929)

திருப்பாற்கடலில் நடைபெற்ற மகாநாட்டில்

நாகை நீலாயதாக்ஷியம்மன், வரவேற்பு தலைவர்.

மதுரை மீனாக்ஷியம்மன், திறப்பாளர்.

காசி விஸ்வநாதர், அக்கிராசனர்.

1094

இவர்கள் நிகழ்த்திய

## சொற்பெருக்கு.

விளம்பர அதிகாரி:—

S. K. இராமசாமி,

தொண்டர்படை சேனாதிபதி, நாகபட்டணம்.

ஜனோபகார அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது. 32—729.

1933.

விலை அணா 2.

# ஆராய்ச்சி

என்னும்

## ஓர் மாதாந்த தமிழ் பத்திரிகை.

சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம், எம்மக்களும் அடையவேண்டிய பல சீர்திருத்தங்களும், மக்களிடையே நீடித்த நாள் பழக்கமாயிருந்துவரும், குருட்டு நம்பிக்கையையும், மூட பழக்க வழக்கங்களையும் களைதல் அவசியமென்பதைப்பற்றியும், ஆசாரம், ஒழுக்கம், நவீன நாகரீகம், சுகாதாரம், முதலிய போதனைகளும் அடங்கிய ஜாதி, மத பேதமின்றி, எவர்க்கும் பொதுவாய் உண்மையை விளக்கும் ஓர் சிறந்த பததிரிக்கையாகவும், பெண்கள் விடுதலை, சமஉரிமை முதலிய அங்கங்களை தாங்கிய பல சங்கதிகளும் மக்கள் மனதில் எளிதில் உணரும்படியாகவும், எளிய தமிழ் நடையில் வெளிவந்திருக்கிறது.

பிரதி மாதமும், புத்தக ரூபமாய் உயர்ந்த காகிதத்தில் அச்சிட்டு வெளிவரும்.

### சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, பர்மா, உள்நாடுகளுக்கு வருஷ சந்தா | | ரூ 1—8—0. |
| வெளி நாடுகளுக்கு | ,, | ரூ 2—0—0. |

### விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| 1-பக்கத்திற்கு | 1-பதிப்புக்கு, | ரூ 5—0—0. |
| அரைபக்கத்திற்கு | ஷை, | ரூ 3—0—0. |

ஆபீஸ்,
நாகை வெளிப்பாளையம்,

எஸ். கே. இராமசாமி,
பத்திராதிபர், நாகபட்டணம்.

உ

உபசரணைக்கமிட்டி சேர்மென் ஸ்ரீமதி

# நீலாயதாக்ஷியம்மன் உபந்நியாசம்.

21 FEB 1933

சகோதர சகோதரி விக்கிரகங்களே!

தேசமக்கள் விடுதலை அடையவேண்டிய நிமித்தமாய் இன்று கூட்டப்பட்டிருக்கும் இம்மகாநாட்டிற்கு உபசரணைக் கமிட்டி சேர்மனாக என்னை நியமித்ததின் காரணம் பொதுவாய் மக்கள் பெண்களைக்கொண்டே பலவித உபசரணைகளையும் பெறுவது மக்களின் வழக்கமாய் இருப்பதை முன்னிட்டு பெண் விக்கிரகமாகிய என்னை உபசரணை செய்யும்படி ஆக்யாபிக்கப்பட்டிருப்பதாய் நான் ஒருவாறு நினைத்தபோதிலும், பொதுவாக உபசரணைசெய்வது மேலான காரியமென்றும், அத்தகைய உபசரப்பில் என்னை நியமனம் செய்ததைப்பற்றி நான் மிக்க பாக்கியசாலி என்றும், நான் ஒப்புக்கொண்டு, உபசரணை செய்ய இசைந்துள்ளேனெனினும் என் உபசரிப்பில் எவ்வித குற்றம் குறைகள் காணப்படினும் மன்னிக்கும் படியாய் உங்களை தாழ்மையுடன் வேண்டிக்கொள்ளுகிறேன்.

இங்கு விஜயம் செய்திருக்கும் உங்களில் பலர் தாவர பக்ஷணிகளாகவும், பலர் மாமிச பக்ஷணிகளாகவும் இருப்பதால் அவ்வவ்வர்களுக்குத் தக்கப்படி உபசரணை புரிவது மிக்க கஷ்டமானாலும், கூடுமான வரையில் யாவற்கும் பொதுவாய் தாவர பக்ஷண ஆகாரமேயாவற்கும் அளித்ததில் சிலருக்கு அதிருப்தி இருக்கக் கூடுமென்று மதித்தாலும், ஜீவகாருண்யமுறையில் நான் செய்தது சரியென்று யாவரும் உணர்ந்து கொள்வீர்கள்.

மதுபானமும் மாமிச உணவும் ஆரியர்கள் இந்தியாவில் வந்தது முதல் மக்களிடையே பரவச்செய்தமையால் அதை மக்களுள் சிலர் கையாண்டு வருகிறார்கள்.

அவர்கள் ஆராதிக்கும் கடவுள் என மதிக்கும் விக்கிரகங்களுக்கு அம் மது மாமிசங்களை உணவு பொருள்களாக வைத்துப் படைக்கும் பழக்கத்தை தவிர, நம்மில் மது மாமிசம் உண்ணும் விக்கிரகங்கள் உண்டு என்று அவர்கள் நினைப்பது மதியீனம்.

945
364.163

இங்கு விஜயமாகி இருக்கும் விக்கிரகங்கள் பலவற்றுள் உருவமின்றி ஒதியமரத்தடி வீறன், வேப்பமரத்தடி காத்தான், அரசமரத்தடி முனியன் என செங்கல் உருவமாய் தேவதைகள் வந்திருப்பதை நான் பார்த்து அவர்களுக்கு உபசரிப்பு செய்வது எவ்விதம் எனமதிக்க எனக்கு இயலாவிடினும், அவர்களுக்கும் தக்கபடி அவர்கள் இஷ்டபடிக்கும் உபசரிப்பு செய்திருக்கிறேன். உபசரிப்பில் குற்றம் குறை ஏற்பட்டாலும் மன்னிக்கும்படியாய் பிரார்த்திக்கின்றேன். மக்கள் விடுதலைக்காக இம்மகாநாடு கூட்டப் பட்டிருப்பதை யாவரும் உணர்வீர்கள். மக்களிற்சிலர் தாங்கள் உயர்ந்தோர் என்று பலரை ஒதுக்கி வைப்பதற்குக்காரணம் நம்மை சாட்டுகிறார்கள். சிலர் நம்மில் பிர்ம்மாவின் முகத்தில் பிறந்ததாயும், மற்றும் பலர் தோள், வயறு, பாதம் இவைகளில் பிறந்த தாயும் சொல்லுகிறார்கள். ஆகவே எல்லோரும் பிர்ம்மாவிடம் உற்பத்தி யானார்கள் என்று சொல்லும் சாஸ்திரத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டாலும், எல்லோரும் பிர்ம்மாவின் பிள்ளைகளே ஆவார்கள். ஆதலின் ஒருவருக்கொருவர் உயர்வு என்று சொல்வது பிசகு. பிர்ம்மாவுக்கு ஓர் பெண்ஜாதி சரஸ்வதியென்று ஒருவள் இருக்கும் போது, அவளிடம் பிள்ளைகளாய் மக்கள் தோன்றாமல் எவ்விதம் மக்கள் உற்பத்தியானார்கள் என்பது புலப்படவில்லை. ஆடவர்களிடம் மக்கள் உற்பத்தியாகுதல் எவ்விதம் என்பதை மக்கள் பகுத்தறிவால் உணர்தல்வேண்டும். மக்கள் மூட நம்பிக்கையால் நம்மில் பல விக்கிரகங்கள் மக்களுக்கு குழந்தைகொடுக்க, சக்தி

உள்ளவர்கள் என்றும், வியாதிகளை தீர்க்கவல்லவர்கள் என்றும் நம்பி நமது பேரால் ஏராளமான திரவியங்களை செலவு செய்கிறார்கள். ஆனால் அவர்கள் நம்பியிருப்பதுபோல் அக்காரியம் சித்தியாகும் வரையில் வேறு யாதொரு முயற்சியும் செய்யாமலிருப்பார்களா யின் உண்மை வெளியாகிவிடும். ஆனால் அவர்கள் அப்படி நம்பி பிரார்த்தனை செய்தும் அவ்விதமே நம்பி இராமல் அதற்கான பல முயர்ச்சிகளையும் மக்கள் செய்கின்றனர். ஆனது பற்றி அவர்கள் காரியம் கைகூடியது என்று அறிந்துகொள்ள அசக்தர்களாக இருக்கின்றனர். வேணுமென்று பரீக்ஷித்துப் பார்த்தால் உண்மை புலப்படும்.

நம்மில் லிங்கம் என்று விக்கிரகமொன்றிருக்கிறது. அதன் விருத்தாந்தத்தைப்பற்றி மக்கள் ஏற்படுத்தியிருக்கிற சாஸ்திரத்தில் காணப்படும் ஆபாசம் இங்கு எனக்கு எடுத்துரைக்க வெட்கமாக் இருக்கிறது. ஆனால் அதனை யாவரும் உணர்வீர்கள். நம்மில் ஆஞ்சநேயர் என்பவர் பரமசிவத்தின் வீரியம் வாயுபகவான் என்னும் காற்றால் அஞ்சனாதேவியின் வாயில் போடப்பட்டதாயும் அது குழந்தையாய் உற்பத்தியாகி ஆஞ்சநேயர் உற்பத்தியானார் என்றும் புராணங்களில் வறைந்து அதற்கென ஒரு உருவமும் செய்திருக்கிறார்கள். இது எவ்விதம் பொருத்தமுள்ளதாய் இருக்கும். இதைப்போல் மகாபாரதத்தில் ஓர் ஆச்சரியமான விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது பரமசிவன் துரோணாச் சாரியின் பெண்சாதியிடம் சாதம் பிச்சை கேட்டதாயும், அவள் சாதம் போட்டதாயும், அச்சமயம் பரமசிவன் நிர்வாணத்துடன் சாதம் போட்டால் மட்டும் புசிப்பேன் என்று சொன்னதின்பேரில் அவ்விதமே அவள் நிர்வாணத்துடன் பிச்சை போட்டபோது அவள்மீது காதல்கொண்ட பரமசிவத்தின் வீரியம் சாதத்தில் விழுந்தாயும், அதை அவள் குதிரைக்கு கொடுத்தாயும், அதனிட மாக அஸ்வத்தாமன் என ஓர் ஆண் குழந்தை பிறந்ததாம். இது என்ன ஆச்சரியம்! இது இயற்கைக்கு பொருந்துமா? இத்தகையது களையும் மக்கள் நம்புவது மதியீனமல்லவா? நிற்க துரோபதைஎன்ற

விக்கிரகம் இங்கு விஜயம் செய்திருப்பதை யாவரும் உணர்வீர்கள். அதற்குப்பாரத ஆதாரம், துரோபதை நெருப்பில் பிறந்ததாயும், அவர்களுக்கு கணவன்மார் ஐவர் என்றும் ஆனால் அவள் பதிவிரதை என்றும் சொல்லி அதை எழுதியவர் நம்மில் கணபதி விக்கிரகமென்றும், அவர்கள் ஒற்றைக் கொம்பை முறித்து மகமேரு பருவதத்தில் எழுதினதாயும் சொல்லப்பட்டிருக்கிறது. இது எவ்வளவு மதியீனம் அக் கட்டுக்கதைகளை நம்புவது எவ்வளவு முட்டாள்தனம். இதனை பலவிடங்களில் நாடக ரூபமாய் நடித்து புகழ்ந்து ஆனந்திக்கின்றனர். இவ்விதம் நம்மை அவமானம் செய்வது மக்களின் அறிவின்றைல்லவா? நம்மில் காணப்படும் ஓர் பிரபல விக்கிரகம் கிருஷ்ணபகவானை யாவரும் அறிவீர்கள். அதனை மகாவிஷ்ணுவின் அம்சமென்றும் அவருக்கு ருக்மணி, சத்தியபாமை என இருவர் மனைவிகளென்றும் அவர்களை அல்லாது ஆயிரக்கணக்கான கோபிகா ஸ்திரீகள் வைப்பாட்டிகளென்றும் புராணங்களில் கற்பனை செய்திருப்பது நமக்கு பெறுத்த அவமானத்தை விளைவிப்பதோடு மக்கள் கெட்டவழியில் செல்வதும் பெண்களை கற்பழிப்பதும் குற்றமல்லவென்றும், கடவுளே அத்தகைய காரியம் செய்திருக்கிறார் என்று சொல்லி மக்கள் தீயவழியில் கெட்டுப்போவதற்கு மார்க்கமாகிறது. இவைகளை மக்கள் கதாகாலக்ஷேபம், நாடகம், பிரசங்கம் முதலியவைகளால் புகழ்ந்து பேசிக்கொள்ளுகின்றனர். இது எவ்வளவு மதியீனம். ஒருவர் ஒரு காரியத்தைச் சொன்னால் அது இயற்கைக்கு பொருத்தமுள்ளதாவென்று மக்கள் பகுத்தறிவால் உணர்ந்துக்கொள்ள வேண்டும். சொன்னதை எல்லாம் நம்பவேண்டும். நம்பாவிட்டாலும் தர்க்கம் செய்து கேள்வி கேட்டாலும் கடவுள் தண்டிப்பார் என்றும் நரகத்திற்கு அனுப்புவார் என்றும் நமது பேரில் சாக்குச்சொல்லும் துரோகிகளின் வார்த்தையை இதன் மூலமாயாவது உணர்ந்துகொண்டு, மக்கள் நல்வழி அடையவேணுமென்றே இம்மகாநாடு கூட்டப்பட்டிருப்பதால் இவைகளில் சிலதைமட்டும் சொல்ல நேர்ந்தது. இன்னும்

இதைப்போல் எவ்வளவோ அக்கிரமங்களை கட்டுக்கதைகள் மூலமாய் எழுதி அதற்கு ஆதாரமாகவும் பொருத்தமாகவும் ஒற்றுமையாகவும் நம்மை கல்தச்சர்களைக் கொண்டு செய்யச்செய்து நமக்கு பேர்கள் பலதையும் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். நம்பி ஏமார்ந்து போகலாமா? கடவுளால் அண்டபிண்ட சராசரங்கள் யாவும் சிருஷ்டிக்கப் பட்டிருப்பதை மக்கள் அறிஞர்களின் வாக்கால் தெரிந்தும், மக்களில் உயர்ந்தோர் என்றும் படித்தோர் என்றும் சொல்லித்திரியும் அஞ்ஞானிகள் கடவுளை கல்தச்சர்களைக்கொண்டு சிருஷ்டி செய்து நம்மை வணங்கும்படி சொல்லுகிறார்களே என்று மக்கள் பகுத்தறிவால் உணர்ந்து கொண்டால் அவ்வயோக்கியர்களின் கட்டுறைகள் நெருப்புக்கு இறையாக்கப்பட வேண்டியவை என்று மக்கள் தெரிந்துகொள்வார்கள். அவ்விதம் அவர்கள் உணர்ந்து கொள்ளாமலிருப்பதற்கு காரணம் குருட்டு நம்பிக்கையும் மூடபழக்க வழக்கங்களுமேயாகும். அது மக்களைவிட்டு அகல வேணுமாய் கடவுளை பிரார்த்திக்கிறேன். வெகு அழகாயும் சிற்ப கொடிகளுக்கு வேலையால் ரொம்பவும் சிலவுசெய்து செய்யப் பட்டிருக்கிற கோடிக்கணக்கான உருவங்களாகிய நாம், இங்கு விஜயமாகி இருக்கின்றோம். வெகு சுலபமாய் அதிக சிலவில்லாமல் சர்க்காரால் செய்யப்பட்டிருக்கிற எல்லைக்கல்லுகள் கோடிக் கணக்காய் நம்மைப்போல் பற்பலவிடங்களில் பதிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வெல்லைக்கற்களுக்குள்ள தத்துவம்கூட நமக்கில்லை. இதனை விளக்கி வியாக்யானம் செய்யத்தேவையில்லை. எல்லைக்கற்களால் மக்கள் நன்மையடைகின்றனர். அவைகளால் மக்களுக்கு சர்க்கார் வாங்கும் கிறயம் நடுகூலி தூக்குகூலி நிற்க எவ்விதம் வீண் சிலவும் நமக்கில்லை. எல்லைக்கற்களில் எவ்வித நல்லா வஸ்த்துகளும் மக்களால் பாழ்படுத்தப்படவில்லை. நம்மில் சிலதுகளுக்கு செய்வது போல் எல்லைக்கற்களுக்கு பால், எண்ணை, தேன், பன்னீர் முதலிய நல்ல வஸ்த்துக்களை வெகு யோசனைதூரம் காவடிக்கட்டி சுமந்து வந்து ஊத்தினால் அவ்வெரு சாரத்தால் பக்கத்து நிலமாவது செழித்துவிளையும், மக்கள் லாபமடைவார்கள்.

நமக்கு ஊத்துவதில் பிரயோஜனமே கிடையாது என்பதை மக்கள் உணர்ந்துக்கொள்ளவேண்டும். பெண் விக்கிரகங்களாகிய நமக்கு அவமானம் சம்பவிக்க கூடிய முக்கிய விஷயமொன்று தங்கள் கவனத்திற்கு எடுத்துரைக்க விரும்புகின்றேன். தங்கள் தாய்க்கும் மேலான கடவுள் என் மதிக்கும் மக்கள், நம்மில் சிலதுகளுக்கு வனமுலைநாயகியார் என்றும், முற்றிலாமுலையம்மையார் என்றும், சிற்றிடைநாயகியார் என்றும், குன்றுமுலைநாயகியார் என்றும் இளமுலைநாயகியார் என்றும், வார்கொண்டமுலையம்மையார் என்றும், பல அனடமொழிகளால் நமக்கு பெயரிட்டிருப்பது எவ்வளவு மதியீனம். அதற்கு ஆதாரமாய் ஸ்தல புராணங்களும் எழுதி வியாக்யானம் செய்து புகழ்கின்றனர். இதானது காம விகாரங்கொண்ட காதலன் காதலியைப்புகழ்ந்து அழைக்கும் பெயர்களல்லவா என்று கேட்கின்றேன். (வெட்கம், வெட்கம்) இதனை மக்கள் உணர்ந்து புத்தி கற்றுக்கொள்ளும்படி மக்களை பக்குவப்படுத்துவது நமது முக்கிய கடமையாகும். யாகங்கள் செய்து மோக்ஷம் பெறலாமென்று மக்களில் உயர்ந்தோர் என்று சொல்லிக்கொள்ளும் மக்கள், ஏனைய மக்களை ஏமாற்றி யாகங்கள் செய்து ஏராளமான பணத்தை கொள்ளையடிக்கின்றனர். யாகங்கள் பலவற்றுள் பவுண்ட்ரீ யாகத்தின் செயலை தெரிந்துகொண்டும் இன்னும் மக்களுக்கு நல்லறிவு ஏற்படாதிருப்பது வியப்பை உண்டு பண்ணுகிறது. இன்னும் எவ்வளவோ மூடநம்பிக்கைகளால் மக்கள் நம்மை நம்பி ஏமாற்றமடையாமல் உண்மை தெரிந்துகொள்ள மக்களுக்கு நற்புத்தி கொடுக்கும்படியாய் எல்லாம்வல்ல இறைவனை துதிக்கின்றேன். உபசரணை விஷயத்தில் ஏதேனும் குற்றம் குறைகள் ஏற்பட்டிருக்கின் மன்னித்து மக்கள் முன்னேற்ற விஷயமாய் வேண்டிய தீர்மானங்களை நிறைவேற்றி அவைகளை நடவடிக்கைக்கு கொண்டுவந்து மக்கள் விடுதலையடைந்து இந்தியா சுய அரசு ஆகவேணுமென்பது நமது கடமையென்பதை தெரிவித்துக்கொண்டு இத்துடன் எனது சொற்பொழிவை நிருத்துகின்றேன்.

உ

# மதுரை மீனாக்ஷி அம்மன் உபன்யாசம்.

சகோதர, சகோதரி விக்கிரகங்களே!

உங்கள் வேண்டுகோளுக்கிணங்கி இம்மகாநாட்டைத் திறந்துவைக்கும் பாக்கியத்தைப் பெண் விக்கிரகமாகிய எனக்கு கிடைத்ததைப்பற்றி நான் மிகவும் மகிழ்வடைகிறேன். அவ்விதம் என்னைத் திறந்துவைக்கும்படி இம்மகாநாட்டைக் கூட்டினோர்கள் உத்திரவளித்திருப்பதை மறுக்க நான் எவ்விதத்திலும் பாத்தியம் உடையவளல்ல. மனிதர் மக்களுள் எவ்விதம் ஆடவர்கள் பெண் மணிகளைத் தங்கள் அடிமைபோலும், தங்கள் கருவிகளில் ஒன்று போலும் மதித்து நடத்தி அவர்களை எவ்வித சுதந்திரமும் சுகமும் அடையவொட்டாமல் பல தந்திரங்கள் செய்து யேமாற்றிவருவது போலவே நம் பெண்விக்கிரகங்களுக்கும் பூர்ண சுதந்திரம் அளிக்காமல் நம்மைப பலவிதத்திலும் அவமானம் செய்துவர மக்கள் பல சூழ்ச்சிகள் செய்து, அவைகளுக்கெல்லாம் ஆதாரமாய் பல வேதங்களும் ஆகமங்களும், சாஸ்திரங்களும், புராண இதிகாசங்களும் கடவுளால் யேற்படுத்தப்பட்டதென்றும் பொய்க்கதைகளை நம்பும்படி யேமாற்றி வருபவர்களின் சூழ்ச்சியைத் தெளிவாய் மக்கள் நன் நோக்கத்துடன் தெரிந்துகொண்டு சுகமாய் சுயமரியாதையுடன் ஆண், பெண் இருபாலர்களும் சர்வ சுதந்தரத்துடன் எவ்வித வித்தியாசமுமின்றி வாழவேண்டுமென்ற பூர்ண நம்பிக்கையுடன் இம்மகாநாட்டைத்திறந்துவைக்க முன்வந்துள்ளேன். திறந்துவைக்குமுன் சில விஷயங்களை மட்டும் மக்கள் முன்னேற்ற விஷயமாய் உங்களுக்கு எடுத்துரைக்க விரும்புகிறேன்.

மக்களை ஏமாற்றிப்பிழைக்கும் பிச்சைக்காரர்கள் அதற்கு ஆதாரமாய் நம்மையே காரணமாய் வைத்துக்கொள்ளுகிறார்கள். மக்களுக்கு குழந்தையளிக்கும் தத்துவம் நமக்கிருப்பதாய் நம்மில்

பல விக்கிரகங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு பொருள்பறிக்கும் பிச்சைக்காரர்கள் எத்தனை ஆயிரம், மக்களுக்கு யேற்படும் பல வியாதிகளைத் தீர்க்க வல்லபர் நாம் என்பதாய் மக்களை யேமாற்றிப் பிழைக்கும் பிச்சைக்காரர்கள் எத்தனை ஆயிரம், நமது தலையில் பால் எண்ணை முதலிய உபயோகமுள்ள வஸ்துக்களை ஊத்தினால் மோட்சம் பெறலாமென்று சொல்லித்திரியும் மடாதிபதிகள், டிரஸ்டிகள், தேவஸ்தானக்கமிட்டியார்கள், குருக்கள் என்று பேர் வைத்து திரியும் மடயர்கள் முதலியோர் எத்தனை ஆயிரம், நம்மைப் பலவித மரக்கட்டை, செம்புக்கட்டை வாகனங்களில் இருக்கிக் கட்டித் தெருத்தோறும் இழுத்து நடந்தால் மக்கள் மோட்சம் பெறுவார்கள் என்று பாமரமக்களை யேமாற்றித்திரியும் சுயநலம் கருதும் அஞ்ஞானிகள் எத்தனை ஆயிரம் என்று சொல்லுவேன். நம்மில் ஒரு சிறு விக்கிரகத்தை பெரியதோர் தேர்மீது வைத்து ஆயிரக்கணக்கான மக்களைக்கொண்டு கட்டியிழுக்கச்செய்யும் கசடர்கள் எத்தனை ஆயிரம். நம்மில் ஆண் விக்கிரகங்களுக்கு மானிடப் பெண்கள் தேவை என்று ஓர் வகுப்புப் பெண்மணிகளை பொட்டுக் கட்டி அவர்களை விபசார ஜீவனம் செய்ய யேற்ப்பாடு செய்யும் கல் நெஞ்சமுடைய குருக்கள் என்று சொல்லித்திரியும் காளைகள் எத்தனை ஆயிரம், அவ்விதமே நம்மில் பெண் விக்கிரகங்களுக்கு ஆண் மக்கள் தேவையென்று எவ்வித யேற்ப்பாடும் செய்யாமல் நம்மை கனப்படுத்திருக்கும் மக்களுக்கு பெண் விக்கிரகங்கள் சார்பாக நான் வந்தனமளிக்கின்றேன். (வெட்கம் வெட்கம்) வாஸ்தவத்தில் நம்மில் ஆண் விக்கிரகங்களுக்கு பெண்மணிகள் தேவையானால், அப்பெண் நம்மைத் தொடக்கூடிய பாத்தியதையை வகிக்கும் வகுப்பினைப் பெண்ணுயிருந்தால் ஒருவாறு பொறுத்தமுள்ளதாயிருக்கும். (சிரிப்பு) அவ்வித வகுப்புப் பெண்களைப் பொட்டுங்கட்ட யேற்ப்பாடு செய்தல் நலமாயிருக்குமென்று அபிப்ராயப்படுகிறேன். (விடா நகைப்பு கரகோஷம்).

மக்களின் அறிவு மழுங்கி கடவுள் இன்னதென்பதை தெரிந்து கொள்ளக்கூடாத விதமாய் பலதிறப்பட்ட விகாரரூபங்

களையுடைய நம்மைக் கடவுள் என நம்பும்படியாய் யேமாற்றிப் பொருள் பறித்துத்தின்று கொழுத்துத்திரியும் பிச்சைக்காரர்கள், தங்களை மேலானவர்களென்றும், எல்லாவுயிரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே, என்றபடி தயாள சிந்தையுடன் பிச்சை கொடுக்கும் மக்களை தாழ்ந்தவர்களென்றும் சொல்லுவது மதியீனத்திலும் மதியீனமல்லவா? ஏற்பதிகழ்ச்சி என்ற மூதாதையார் வாக்குப்படி எவரேனும் திருவோடு கையிலேந்தி நமது பெயரைச்சொல்லி பிச்சை எடுத்துப் புசித்தாலும், கடவுள் நம்மைப்போன்ற கல் என்றும் செம்பென்றும் மரமென்றும் பலவித வகையாகிய பல உருவங்களைக் காண்பித்து அதை ஜீவனமாகக்கொண்டு பிச்சை வாங்கி புசித்தாலும், நாங்கள் குருக்கள் என்றும், கடவுள் அம்சம் என்றும் தங்களை வணங்கி பாதகாணிக்கை கொடுத்தால் மோட்சத்திற்கு தாங்கள் வழிகாட்டுவதாயும் சொல்லி, யானைமேலேரியாகிலும் குதிரைமேலேரியாகிலும், மனிதவாகனமாகிய பல்லக்கிலேறியாகிலும், அதிகாரத்துடன் பிச்சை வாங்கி இஷ்டம் போகம் அநுபவிக்கும் பிச்சைக்காரர்கள் என்றாலும், இது கடவுள்பிரசாதம் இதனைநீங்கள் பூசிக்கொண்டால் சுகமடைவீர்களென்று சொல்லி தூர ஸ்திரிகளால் மடிக்கப்படும் சாம்பல், குங்குமம் முதலிய பொட்டணங்களை வியாபார சரக்காய். நேரிலும் தபால் மூலமாயும் விற்பனை செய்து ஜீவிக்கும் பிச்சைக்காரர்கள்என்றாலும், இறந்துபோனமாதாபிதா மூதாதையோர்கள் 27 தலைமுறையிலுள்ளவர்களுக்கும் மோட்சலோகத்திற்கு வழிகாட்டி சகல போகங்களையும் அநுபவிக்கச் செய்யக் கூடியவர்களென்று, மக்களை யேமாற்றி தங்களுக்கு வேண்டிய பல பதார்த்தங்களும் மக்களிடையே பெற்று ஜீவனம் செய்யும் பிச்சைக்காறர்கள் என்றாலும், குருக்கள் என்றும், மடாதிபதிகள் என்றும், சங்கராச்சாரியார்என்றும் பல பெயர்களைச் சொல்லிக்கொண்டு மக்களிடம் கவுரவமாய் பிச்சையெடுத்து அஷ்டபோகம் அநுபவிக்கும் பிச்சைக்காறர் என்றாலும், திரையை நீக்கி சிதம்பர ரகசியம் காட்டி, மக்களிடம் மானம் ஈனமின்றி பொருள்பரித்துத்

தின்னும் திருக்கைலாயத்திலிருந்து வந்த பரம்பரையார் என்று சொல்லிக்கொண்டு அதற்கென்று மக்களிடம் யாஜகம் வாங்கி ஜீவனம் செய்யும் பிச்சைக்காரர்கள் என்றாலும், எல்லாம் பிச்சைக்காரர்கள் என்ற ஒரே பதம் அவர்களுக்குரியதே தவிர, பிச்சைக்காரர்களில் மேலானவர்கள் என்றும், கீழானவர்கள் என்றும் சொல்லுவதற்கில்லை. எல்லோரும் பிச்சைக்காரர்களேயாவார்கள். இவ்விதம் இந்தியாவில் இந்துமதத்தில் சராசரி 100-க்கு 75-பேர் மேல்க்கண்டபடி பிச்சைக்காரர்கள் யிருக்கின்றனரென்று நான் ஒருவாறு கணக்கெடுத்திருக்கிறேன். (சிரிப்பு) இத்தகைய பிச்சைக்காரர்கள் மெஜாரட்டியாராகயிருப்பதால்தான், இந்தியா அடிமை வாழ்வில் அமிழ்ந்துகிடக்கின்றது. நமது ஆலயங்கள் மக்களில் எவர்க்கும் பொதுவென்றும், நாம் எம்மக்களுக்கும் சமத்துவம் அளிப்பவரென்றும் மக்கள் மனதில் பதியவொட்டாமல் ஜாதி வித்தியாசம் என்னும் ஓர் அழுக்கானது மக்களிடையே செல்லும்படி சில யுக்திகள் செய்து, ஓர் வகுப்பார்கள் மட்டும் பூர்ண சுதந்தரமும் சுகமும் பெற்று ஏனையோர்கள் அவ்விதம் அனுபவிக்கக்கூடாதென்பதற்கு பல வழிகளிலும் முட்டுக்கட்டைகள்போல் பல கட்டுக்கதைகளையும் உண்டுபண்ணி, பழக்கம் வழக்கம் என்ற ஏற்பாட்டையும் புகுத்தியுள்ளார்கள். அம்மூட பழக்க வழக்கங்கள் மக்களால் களைந்தெரியப்பட்டால் அன்றே சுயராஜ்யம் பெற அருகர்கள் ஆவோம் என்று மக்கள் உணர்தல்வேண்டும். மக்களின் நன்மையைக்கோரியே இம்மகாநாடு கூட்டப்பட்டதென்பதை தாங்கள் நன்குணர்வீர்கள். கோவில்களுள் மக்களுக்கு சமத்துவம் வழங்கப்படாமை ஒழுங்கீனமென்று மக்களுள் ஓர் பெரியாரான மதராஸ் அட்வகேட், ஹானரபிள் எஸ். சீனிவாச அய்யங்கார் அவர்கள் 4—6—1918உயில் மதுரை விக்டோரியா டவுன் ஹாலில் நிகழ்த்திய சொற்பெருக்கை உங்களுக்கு நினைவூட்டுகின்றேன்.

"எல்லா ஜாதிகளுமே தங்கள் சமூக வாழ்வில் நம்முடைய மதத்தால் உண்டாகும் தூண்டுதலையும், ஆறுதலையும் சமமாக அனுபவிக்கும்பாத்தியதையையடையவேணுமென்றும், மதசம்பந்த

மான கிரியைகளை நடத்துவதில் எல்லோரும் சமமாகயிருக்க வேணுமென்றும், இப்போது எல்லாவிடங்களிலும் ஆசை அதிகரித்து வருகிறது. தங்களுடைய பழய ஆலயங்களுக்கு வரும்படி உங்களுடைய அண்டை அயலார்கள் உங்களை உற்சாகமாய் அழைக்கும்படியான காலம் வெகு சீக்கிரத்துள்ளிருக்கிறது. அடுத்த (20) வருஷங்களுக்குள் தீவிரமான மாருதல்கள் ஏற்படுமென்று எதிர்பார்க்கிறேன். சென்ற வருஷத்தில் கனம் ஜஸ்டிஸ் சதாசிவய்யர் அவர்கள் (இதே இடத்தில் அக்கிராசனம் வகித்தபோது) நான் கோவில்களில் ஆராதனை செய்வதை மதிப்பதில்லையென்றும், நீங்களும் அப்படியே செய்யும்படியாயும் சொன்னதாக தெரிகிறது. எனக்கு அர்த்தமான மட்டில் அவர் சொன்னதை நான் ஒப்புக்கொள்ள முடியவில்லை. பலர் கூடி ஒரே இடத்தில் கடவுளை வணங்க ஏற்பட்ட இடங்களே கோவில்கள். பூர்வ காலங்கள் தொட்டு வந்திருக்கும் கோவில்கள் பல மஹான்களுடைய சம்பந்தத்தாலும், பல தலைமுறை ஜனங்களின் பக்திக்கு இலக்காக இருப்பதாலும் புனிதமாக கொண்டாடப்படுகின்றன. இந்துக்களின் மத சம்பந்தமான வாழ்வில் கோவில்கள் வெகு முக்கியமான ஸ்தானம் பெற்றிருக்கின்றன. கிறிஸ்தவர்கள் தங்கள் (சர்ச்) ஆலயங்களிலும், முகம்மதியர்கள் தங்கள் மசூதிகளிலும் தொழுவதுபோல் இந்துக்கள் தங்களுடைய கோவில்களில் தொழுகின்றனர். இந்து மதத்தின் சகல பெரிய கோவில்களும் ஜாதி பேதமின்றி எல்லா ஜாதியாரும் தொழுகைக்காக போய்வர தடையின்றி இடங்கொடுக்கப்படுவதாயிருந்தால் எனக்கு நிரம்ப சந்தோஷமுண்டு. காசியிலுள்ள பெரிய விஸ்வேஸ்வரர் கோவில் முதலான வட இந்தியாவின் சில பெரிய கோவில்களிலும், தென் இந்தியாவிலுள்ள ஒன்றிரண்டு பெரிய கோவில்களிலும், இந்துக்களாக உள்ள எல்லா ஜாதியினரும் புகுந்து தரிசித்து வருகிறார்கள். பெரிய கோவில்களுக்குள் எல்லா இந்துக்களும் புகுந்து ஆராதனை செய்யலாமென்று இடம் கொடுத்துவிட்டால், இந்து மதத்திற்கு லாபமேயல்லாது நஷ்டமல்ல. எல்லா ஜாதிகளும் கடவுளுக்கு சமமல்லவா? அப்படிக்கிருக்க கோவிலுக்

குள் பிரவேசிக்கக்கூடாதென்று சிலரை ஒதுக்கும் நடவடிக்கை எப்படித்தகும்? பகவத் வணக்கம் சத்தியத்தை தழுவியதல்லவா? ஆனால் தற்சமயம் இருக்கும் நிலைமை விஷயமாய் நமது மதத்தின் மேல் குற்றம் சொல்ல இடமில்லை. மனுஷியனே செய்துகொண்ட சட்டங்களும் வழக்கங்களுமே மேற்கண்ட ஒழுங்கீனங்களுக்கு காரணமானவை” என்று விளக்கி காட்டிப் பேசியிருப்பதிலிருந்து மனுஷ்யன் செய்துகொண்ட சட்ட திட்டங்களாகிய வேதம், ஆகமம், சாஸ்திரம், புராணம், இதிகாசம் முதலியதுகள், கடவுளால் சொல்லப்பட்டதென்று மக்களை ஏமாற்றித் திரியும் அறிவிலிகளின் செயலை என் சொல்வது. சுருதிகளில் எது சொல்லப்பட்டிருந்தாலும் அது யுக்திக்கும் அனுபவத்திற்கும் ஒத்திருந்தாலல்லது அவைகளை பிரயோஜனமற்றவையென்று புறக்கணித்தல் புத்திமான்களின் செயலாகும். மக்களைக் கொடுமைப்படுத்த வேணுமென்ற நோக்கத்துடன் மனுதர்ம சாஸ்திரம் மோசடியாக கற்பனை செய்யப்பட்டு, ஓர்சாரார்மட்டும் சுகமடையவும் ஏனையோர்கள் அதிக கஷ்டமடையவும் செய்துவந்திருக்கிறார்கள். அதில் சொல்லப்படும் ஒவ்வொரு விஷயத்தையும் கவனித்துப் பார்த்தாலும் அது நியாயமற்ற கட்டுக்கதை என்பது படிப்பில்லாத மக்களும் உணர்ந்துகொள்ளக்கூடும். அப்படிக்கிருக்க அறிவாளிகளும் அக்கட்டுக்கதைகளை நம்புதல் எத்தகைய மடமை? கடவுளுக்கு உருவமில்லை என்று ஒப்புக்கொள்பவர்கள் எக்காலத்தில் எவராவது கடவுள் குரங்கைப்போலிருப்பாரென்றாலும், கடவுள் நாயைப்போலிருப்பாரென்றாலும், அவைகளையெல்லாம் நம்பி அந்தந்த உருவங்களாக அவர்கள் மனம்போன போக்காய் நாம் பலவித விகார ரூபங்களாக அமைக்கப்பட்டிருக்கிறோம். இங்கு விஜயமாயிருக்கும் நாம் ஒன்றைப்போல் மற்றொன்றைக்காணமுடியவில்லை. ஒவ்வொருவரும் ஒன்றைப்போல் மற்றொன்றின்றி யாவும் வித்தியாசப்பட்ட உருவங்களாகயிருக்கின்றோம். ஸ்தபதி நினைத்தபடிதான் கடவுள் உருவம் எனக்கருதியிருக்கும் மக்களுக்கு நல்லறிவு ஏற்படவேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன். காணப்படும் பொருள்கள் பலதையும் காட்டினாலும், அல்லஅல்லவென்று வேதம்

சொல்லுவதைத்தவிர யீதுதான் என நிச்சயமாய் வேதத்திலும் சொல்லப்படவில்லையென்றும், எதையேனும் சொல்லவேணுமென்ற ஆசையால் சொல்வதாயும், திருவிளையாடற் புராண கர்த்தா சொல்லியிருப்பதைக் கவனித்தால், வேதத்திலுங்கூட கடவுள் உருவம் சொல்லப்படவில்லையென்று தெரிகிறது. "அல்லை யீதல்லை யீதென மறைகளும் அன்மைச்சொல்லினால் துதித்திளைக்கும் இச்சுந்தரநாதர்க்கு எல்லையாகுமோ என்னுரை, என்செய்குவே னிதை சொல்லுவோமெனுமாசை என்சொல் மொழி கேளாய்" என்று சொல்லியிருக்கிறார். மற்றும், "கர்ப்பங்கள் பலகோடி செல்ல தீயகனலில் நடுவூசியின்மேல் காலையூன்றி, பொற்பறமெய் உணர் வின்றி உறக்கமின்றி வுலர்ந்தெலும்பு புலப்பட ஐம்புலனை வோம்பி நிற்பருக்கொளித்தது மறைக்கொளித்து, யோக நீண்முனிவர்க் கொளித்து மேலாம் சிற்பதத்தின் சின்மயமாய் நிறைந்து ஞான திருவாளருள் கலந்த எங்கள் தேவ தேவே" என்றும், "தானான தன்மயமே அல்லாலொன்றை தலையெடுக்க வொட்டாது தலைப்பட் டாங்கே, போனாலும் கற்பூர தீபம்போல, போய் ஒளிப்பதல்லாது புலன்வேறின்றாம், ஞானகாரத்தினொடு ஞேயமற்ற, ஞாதுருவும் நழுவாமல் நழுவிநிற்கும், ஆனாலும் யீதன்பெருமை எவர்க்கார் சொல்வார், அதுவானால் அதுவாவர் அதுவே சொல்லும்" என்றும் ஆன்றோர் சொல்லைக்கொண்டும், கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர் என்னும் ஆன்றோர்பழமொழியையும் ஆழ்ந்துநோக்கின் கற்களாகிய நம்மை கடவுளென எம்மடையர் ஒப்புக்கொள்வார். (காகோஷம்) நாம் காதால் கேட்டு யின்பம் நுகர சத்தியுள்ளவர் அல்லவென்று தெரிந்தும் நமக்குபாட்டுக்கச்சேரியும், மேளக்கச்சேரி யும், நாம் கண்ணால்கண்டுயின்புற சக்தியில்லாதவர்களென்று தெரிந் தும், நமக்கு சதுர்க்கச்சேரியும், கோலாட்டக்கச்சேரியும், வாண வேடிக்கைகளும், நாம் நாவினால் சுவைத்து அருசுவையின் ருசி யறிய சக்தியில்லாதவர்களென்று தெரிந்தும் நமக்கு பிரசாதம் பலகார வகையும் பஞ்சாமிர்தமும், நமது திரேக ஸ்பரிசத்தால் இன்பபோகங்களை அனுபவிக்க சக்தியில்லாதவர்களென்று தெரிந்

தும் நமக்கு கல்யாணங்களும், பள்ளியறை முதலிய பல் ஆபாசங்களை நடத்தியும், நாம் மூக்கினால் முகர்ந்து வாசனையின்பம் அனுபவிக்க சக்தியில்லாதவர்களென்று தெரிந்தும், நமக்கு புஷ்பம், சந்தனம் முதலிய வாசனை வஸ்துக்கள் சமர்ப்பித்து பணத்தை வீண் சிலவு செய்ய மக்களை தூண்டி அக்காரியங்களை மேலதிகாரிகளாகயிருந்து நடத்தும் மடாதிபதிகள், கோவில் டிரஸ்டிகள், ஆலய நிர்வாகிகள், தேவஸ்தானம் கமிட்டியார்கள் முதலியோர்களின் கடைந்தெடுத்த முட்டாள்தனத்தை நான் மிகவும் கண்டிக்கின்றேன். அவர்களுக்கு நல்லறிவு உண்டாக வேணுமென்று பிரார்த்திக்கிறேன். (வெட்கம் வெட்கம்) மேல் கண்ட மூட பழக்கத்தில் வீண் செலவு செய்யும் திரவியத்தை சிலவுசெய்யவொட்டாமல் தடுத்து, ஷை தொகையை மக்கள் விடுதலைக்காக கல்வி அபிவிர்த்தி விஷயத்தில் சிலவுசெய்ய ஏற்பாடு செய்யும்படி கனம் கல்வி இலாகா மந்திரி அவர்களை கேட்டுக் கொள்ள நாம் கடமைப்பட்டுள்ளோம். (கரகோஷம்) இது விஷயமாய் இம்மகாநாட்டில் ஓர் தீர்மானம் செய்தல் அவசியமெனவும் கருதுகிறேன். காலதாமதமாவதை முன்னிட்டு இத்துடன் என் உபந்நியாசத்தை முடித்து மக்கள் மூட பழக்கவழக்கங்களிலிருந்து விலகி சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் அடைந்து சுயராஜ்யமடையவேணுமென்ற முழு நம்பிக்கையுடனும், நன் நோக்கத்துடனும் இம்மகாநாட்டை மனப்பூர்வமாய் திறந்து வைக்கிறேன். (நீண்ட கரகோஷம்).

உ

# காசி விஸ்வநாதர் அவர்கள்

## அக்கிராசனம் வகித்தபோது

## நிகழ்த்திய சொற்பெருக்கு.

---:o:---

சகோதர சகோதரி விக்கிரகங்களே!

இம்மகாநாட்டிற்கு என்னை அக்கிராசனம் வகிக்கும்படி கும்பகோணம் ஸ்ரீமான் கும்பேஸ்வரர் அவர்கள் பிரரேபித்து என் பெருமைகளைப்பற்றி பேசியபோது, முக்கியமாக மக்களுக்கு முழுச் சமத்துவம் அளித்தவரென்று என்னை குறிப்பிடுவதி லிருந்து சில விடங்களில் சமத்துவம் வழங்கப்படாமலிருப்பதாயும் தெரிந்து நான் ஆச்சரியமடைகிறேன். கடவுள் பொது என்னும் இல்ட்சியத்திற்கு விரோதமாய் நம்மை நடத்தி நம்மை தெய்வம் என்று வழிபடல், மதியீனம் என்பதை மக்கள் உணராது சில விடங்களில் சமத்துவம் மறுக்கும்படி சூட்சிகள் செய்திருக்கும் அற்பர்களுக்கு நாம் இம்மகாநாடுமூலம் அறிவுருத்தல் அவசியம். அதற்கென்றே இம்மகாநாடு கூட்டப்பட்டிருக்கிறதென்பதையும் அறிவீர்கள். இங்கு கூடியிருக்கும் நாம் பற்பலவிடங்களிலிருந்தும் பற்பல பாஷைகள் பேசும் இடங்களிலிருந்தும், பற்பல மனிதர்கள் தங்கள் தங்கள் மனம்போன போக்காய் நம்மை சிற்ப வேலைக்காரர் களான ஸ்தபதிகளைக்கொண்டு செய்வித்து, அனேக விகார ரூபங் களாக இங்கு விஜயமாகி இருக்கின்றோம். மனிதர்களைப்போலவே நம்மை செய்திருந்தாலும், அல்லது மிருகங்களைப்போலவே நம்மைச் செய்திருந்தாலும், அல்லது பறவைகளைப்போலவே நம்மைச் செய்திருந்தாலும் நாம் மனிதர்களைவிட மேலானவர்க ளென்று மக்கள் கருதுவதற்கு ஒரு நியாயமுண்டு. அப்படிக் கில்லாமல் ஒன்றுக்கு யானைமுகம், ஒன்றுக்கு குரங்கு முகம், ஒன்றுக்கு மனிதர் முகமும் மிருக உடலும், சிலதுகளுக்கு மனித முகமும், சிலதுகளுக்கு தலையே கிடையாது, சிலதுகளுக்கு கை

கால்கள் கிடையாது. சிலதுகளுக்கு ஒருதலை, சிலதுகளுக்கு 4, 5, 6, தலைகள், சிலதுகளுக்கு இரண்டு கைகள், சிலதுகளுக்கு நாலு கைகள் சிலதுகளுக்கு பனிரெண்டு கைகள், சிலதுகள் மாட்டைப் போலும், சிலதுகள் பறவைபோலும், சிலதுகளுக்கு மனிதசரீரமும் இரண்டு இறக்கையும், இன்னும் கணக்கிலடங்காத விதமாய் மனிதர்கள் நினைத்தபடியெல்லாம் இயற்கைக்கும் ஒழுங்குக்கும் விரோதமாய் மனிதர்களால் நிர்மாணிக்கப்பட்டிருக்கிற பல்லாயிரம் விக்கிரகங்களாகிய நாம் இங்கு கூடியிருப்பதில், ஒருவருக்கொருவர் வேறுபட்ட வித்தியாசமுள்ள உருவங்களாக இருக்கின்றோம். நம்மில் சிலதுகள் சைவபக்ஷணம் புசிப்பவரென்றும், சிலதுகள் மாமிச பக்ஷணம் புசிப்பவரென்றும் மக்களால் வித்தியாசம் ஏற்படுத்தி இருப்பதிலிருந்து நாம் ஏகோபித்து ஓர் இடத்தில் சமமாய் புசிக்கவும உட்காரவும் அந்தஸ்தில்லாதவர்களாக இருக்கின்றோம். கடவுளெனமதிக்கும் நம்மையே இவ்வித வித்தியாஸ மேற்படும் நிலைமையில் நிர்மாணம் செய்து, அவைகளுக்கு ஆதாரமாய் சில கட்டுக்கதைகளான வேதம், ஆகமம்,சாஸ்திரம், புராணம், இதிகாசம் முதலிய ஆபாச கதைகளையும் உண்டுபண்ணியிருக்கும் நோக்கம், ஓர் வகுப்பார்கள் ஏனையோர்களை அடிமைப்படுத்தி தாங்கள் சர்வ சுதந்திரத்துடன் தின்று கொழுத்து திரியும் பாத்தியதையை அடையவேண்டியதற்காகத்தானென்று நன்கு புலப்படுகிறது.

நம்மில் சிலதுகளுக்கு பெண் ரூபம் ஏற்படுத்தி அதனை தினசரியோ, தினசரி ஆறுதடவையோ ஒருவரல்லாமல் பல ஆண் மக்கள் அவைகளின் ஆடைகளைக்களைந்து, சகல பாகங்களையும் தொட்டுத் தேய்த்துக்கழுவி அக்கிரமம் செய்து, அவ்விதம் அவமானம் செய்யப்பட்ட நம்மை மக்கள் வணங்கவேணுமென்று மக்களுக்கே உபதேசம் செய்து அதற்கென கூலியும்பெற்று வயிறு வளர்க்கும் மக்களை எதற்கு ஒப்பிடலாமென்று எனக்கே புலப்படவில்லை, அவ்விதம் செய்யும் மக்களுடையவும், அவ்விதம் செய்ய அனுமதியளிக்கும் மக்களுடையவும், அதனை கண்ணுற்று மகிழ்வமடையும் க்களுடையவும், பெண்ஜாதிகளை மற்றவர்கள்

அவ்விதம் நிர்மாணமாக்கி தொட்டுத்தேய்த்து அக்கிரமம் செய்தால் அவர்களுக்கு அவ்வக்கிரமம் செய்தவர்கள்மீது எவ்வித ஆத்திரமும் கோபமும் ஏற்பட்டு என்னசெய்வார்களோ, அவ்விதம் நாம் நமது மனைவிகள் என்று சொல்லப்படும் பெண் விக்கிரகங்களை அக்கிரமம் செய்துவரும் மக்களை இதுவரையில் எவ்வித தீங்கும் செய்யாமலிருப்பதிலிருந்து, நமக்கு ஏதேனும் தத்துவம் இருக்கிறதாவென்று மக்கள் உணர்ந்துகொள்ளும் பொருட்டு உங்களுக்கு எடுத்துரைக்கின்றேன். (அவமானம், அவமானம்).

இது விஷயமாய் நம்மால் பரப்பிர்ம்ம ராஜ்யம் இயமபுரம் டிஸ்டிரிக்டு கோர்ட்டாரவர்கள் சமுகத்திற்கு, நாகபட்டணம் தொண்டர்படை சேனாதிபதி S. K. ராமஸாமி அவர்கள் மூலமாய் கொடுத்த விக்கிரகங்கள் முறையீடு என்னும் மனுவுக்கு இதுவரையில் யாதொரு பரிகாரமும் ஏற்படாமலிருப்பதைப்பற்றி இங்கு கூடியிருக்கும் இம்மகாநாடு அனுதாபப்படுவதாய் ஓர் முக்கிய தீர்மானம் நிறைவேற்றவேண்டியது அவசியமென்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். அம்முறையீட்டை இங்கு உங்களுக்கு எடுத்துரைக்க விரும்புகின்றேன். அதாவது:—

## விக்கிரகங்களின் முறையீடு.

### பரப்பிர்மராஜியம், எமபுரம் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் கோர்ட்டார் அவர்கள் சமுகத்திற்கு.

அகில இந்திய விக்கிரகங்கள், தொண்டர்படை சேனாதிபதி எஸ். கே. ராமசாமி மூலமாய்க் கொடுத்த மனு.

அடியிற்கண்ட எங்கள் கோருதல்களை சுருதி, யுக்தி, அனுபவங்களுடன் ஒத்துப்பார்த்தும் பகுத்தறிவுடனும் சீர்தூக்கிப்பார்த்தும் நியாயப்படி வேண்டிய உத்திரவு பிறப்பிக்கும்படியாய்க் கோருகிறோம்.

1. இந்துமதப்படி கடவுளின் உருவம் மனிதர்கள் கினைத்தவைபோலெல்லாம் கோடிக்கணக்காக உண்டுபண்ணி ஆண் என்றும், பெண் என்றும் வித்தியாச உருவங்களையும் ஏற்படுத்தி நாஸ்திகத்தன்மையை யுண்டுபண்ணி தாங்கள் ஆஸ்திகர்கள் என்று நடித்து பாமர ஜனங்களின் திரவியங்களை பகற்கொள்ளைக்காரர்களாய் வஞ்சித்து கொள்ளையடித்து வயறு வளர்க்கும் பார்ப்பனக் குருக்களையும், ஆலய நிர்வாகிகளையும் தகுந்தபடி சிக்ஷைசெய்து நாஸ்திகத்தன்மையை நீக்கி கடவுளின் சுயவடிவ தரிசனம் செய்து நல்வழி எய்துமாறு பாமர ஜனங்களை ஆஸ்திகர்களாக்கக் கோருகிறோம்.

2. எங்களைக் கேவலமாய் மதித்து எங்களில் சிலதுகளுக்கு யானைமுகமும், சிலதுகளுக்கு குரங்குமுகம், சிலதுகளுக்கு நாலு தலையும், ஐந்து தலையும், ஆறு தலையும், சிலதுகளுக்கு எட்டு கையும், சிலதுகளுக்கு பனிரெண்டு கையும் இயற்கைக்கும் ஒழுங்குக்கும் விரோதமாய் ஏற்படுத்தி எங்களை அவமானம் செய்யும் விக்கிரக நிர்வாண ஸ்தபதிகளை தகுந்த சிக்ஷை செய்யும்படியாய்ப் பிரார்த்திக்கிறோம்.

3. காராக்கிரகங்களில் அடைத்ததுபோல் அடைக்கப்பட்டிருக்கிற எங்களில் பெண் விக்கிரகங்கள் தனித்திருக்கையில் பாப்பனக்குருக்களையும், பூசாரிகளையும் கொண்டு ஆடைகளை களைவித்து எண்ணை தேய்த்து, ஜலக்கிரீடை செய்வித்து, துடைத்து, ஆடை அலங்காரம் செய்ய ஒருவரல்லாமல் பல பேர்வழிகளுக்கு அநுமதி கொடுத்து, மேற்கண்ட அக்கிரமச்செயல்களைச் செய்விக்கும், தேவஸ்தானம் கமிட்டியார், மடாதிபதிகள் முதலியவர்களைத் தகுந்தபடி தெண்டனை செய்தும், ஷை அக்கிரமச்செயல் நடவாமலிருக்க தகுந்த ஏற்பாடு செய்யப்பிரார்த்திக்கிறோம்.

4. கடவுள் எல்லார்க்கும் பொதுவென்று சொல்லி எங்களையே தெய்வங்கள் என்பதாய் பாமர ஜனங்களை ஏமாற்றி நாங்

கள் சாம்பிடுவதுபோலும், எங்கள் ஜீவனத்துக்கு வேறு வழியில்லை யென்று வஞ்சித்து, தேங்காய், பழம், நெய், பால், தயிர் சாதம் முதலியதுகளான அவர்கள் விரும்பும் பல பொருள்களும் பாமர ஜனங்களிடம் பெற்று, வயர் வளர்க்கும்பார்ப்பனக் குருக்களையும், பூசாரிகளையும் தகுந்தபடி சிக்ஷை செய்யும்படியாய் பிரார்த்திக்கிறோம்.

5. குழந்தைகள் ஜீவிக்க பால் இல்லாமல் தவிக்கும் இக் காலத்திலும் எங்கள் விருப்பம்போல் பாமரஜனங்களை ஏமாற்றி, பாழுங்கற்களாகிய எங்கள் தலையில் வழிந்தோடும்படியாய் பால், எண்ணை, தேன் முதலிய பல பதார்த்தங்களும் புரோக்ஷித்து கைக்கூலிபெறும், பார்ப்பனக்குருக்களையும் அவர்களுக்கு உடந்தையாயிருக்கும் கோவில் நிர்வாகிகளையும், மடாதிபதிகளையும் தெண்டனை செய்யும்படியாய்க் கோருகிறோம்.

6. கடவுள் என மதிக்கும் எங்களில் சிலதுகளுக்கு நாகம், மயில், பருந்து, கிளி, அன்னம், யானை, குரங்கு, குதிரை, சிங்கம், எருது, எருமைக்கிடா, ஆட்டுக்கிடா, சேவல், பெருச்சாளி, மூஞ்சூறு முதலியதுகள் வாகனங்களென்றும், அவைகளின்மீது நாங்கள் ஆரோகணித்துச் செல்வதுபோல், எங்களை அம்மரக்கட்டை வாகனங்களின்மீது இருக்கிக்கட்டி இம்சை செய்யும் பார்ப்பன அர்ச்சகர்களையும், தேவஸ்தானம் கமிட்டியார், டிரஸ்டிகள், மடாதிபதிகள் முதலியவர்களையும் தகுந்த சிக்ஷை செய்யும்படி பிரார்த்திக்கிறோம்.

7. எங்களில் ஆண் தெய்வமென்றும், பெண் தெய்வமென்றும், உருவினால் பேதப்படுத்தி எங்களுக்குக் கலியாணம் செய்தும், அர்த்த மண்டபம், சபா மண்டபம், மகா மண்டபம், கெர்ப்ப மண்டபமென்றும், பள்ளியறையென்றும், மானிடர்க்குரிய செய்கைபோல் சில ஆபாச அநாகரீகச் செயல்களை செய்விக்கும் வஞ்சக நாஸ்திக கோட்பாட்டு முறைகளை ரத்து செய்யும்படியான ஏற்பாடுகளைச் செய்யும்படியாய்ப் பிரார்த்திக்கிறோம்.

8. நாஸ்தீக கோட்பாட்டு முறையில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் பாழுங்கற்களாகிய எங்கள் சேர்க்கையால் எங்களுக்குப் பிறந்த குழந்தை தெய்வங்களென்று குட்டிச் சாமிகளையும் நிர்மாணம் செய்தும், எங்களில் பலர் விபசாரம் செய்ததாயும் உத்ஸவமும் நடத்திவரும் ஆபாச ஆநாகரீக முறைகளை ரத்து செய்யத் தகுந்த ஏற்பாடு செய்யும்படியாய்க் கோருகிறோம்.

9. பாழுங்கற்களாகிய நாங்கள் விபசாரத்தை விரும்புவதாயும், அதற்காக எங்களுக்கு மானிடப்பெண்கள் தேவையென்றும், ஓர் நல்ல குடியிற் பிறந்த பெண்மணிகளை எங்கள் பேரால் பொட்டுக்கட்டி விபசார ஜீவனம் செய்துவர ஏற்பாடு செய்து அதற்காக கைக்கூலித்தாகு வாங்கி ஜீவனம் செய்யும் கோவில் பெருச்சாளிகளை கூண்டோடு நரகம் சேர்க்கும்படிக்கும், மீண்டும் பொட்டுக்கட்டி விபசாரத்தொழில் செய்ய எங்களுக்குப் பெண்கள் தேவையானல், உயர்ந்த ஜாதியார்களென்று எங்களுக்கு பூஜை நைவேத்தியம் செய்யும் பாத்தியதையை வகிக்கும் ஜாதியார்களே, தங்கள் பெண்களைப் பொட்டுக்கட்டி விபசார ஜீவனம் செய்ய ஏற்பாடு செய்யும்படியாய் உத்திரவு செய்யப் பிரார்த்திக்கிறோம்.

10. எங்களில் சில விக்கிரகங்கள் மானிடர்களின்ரோமங்களை விரும்புவதாய் மானிடர்களின் தலைகளை மொட்டையடிக்கும் அநாகரீகச்செயல்களையும், எங்கள் பேரால் ஜீவ பலியிட்டு ஜீவன்களை சித்திரவதை செய்யும் நாஸ்தீக ஆபாச ஏற்பாட்டையும் ரத்து செய்யும்படிக்கும் உத்திரவு செய்யப் பிரார்த்திக்கிறோம்.

20–6–29. (ஒப்பம்) விக்கிரகங்கள்.

சிபார்சு.

இம்மனுவில்கண்ட விஷயங்களைத் தீர்க்காலோசனை செய்து தகுந்த பரிகாம் செய்யும்படியாய்க் கோறுகிறேன். தவிர இம்மனு விசாரணை முடிந்து தகுந்த உத்திரவு பிறப்பிக்கும் வரையில்,

இம்மனு 3-வது பாராவில்கண்ட அக்கிரமச் செயலைக்கண்டித்து பெண் விக்கிரகங்களை ஆண் குருக்களோ பூசாரிகளோ எவ்வித ஸ்பரிச உணர்ச்சியோ, தொண்டோ யாதொன்றும் செய்யக்கூடா தென்று உடனே தடை உத்திரவு பிறப்பிக்கக் கோருகிறேன்.

எஸ். கே. ராமசாமி,
தொண்டர்படை சேனாதிபதி, நாகை. 25–6–29.

எந்த சாஸ்திரங்கள் கடவுளால் உண்டாக்கப்பட்டதென்று ஸனாதனதர்மிகளும், வைதிகர்களும் சொல்லுகிறார்களோ, அந்த சாஸ்திரங்கள் எதிலேனும் தேடிப்பார்த்தாலும், தீண்டப்படாத ஜாதியார்கள் என்போர் எவருமே கிடையாதென்று தெரிகிறதே ஒழிய உண்டெனப்புலப்படவில்லை. தவிரவும் சண்டாளர்கள் கோவிலுக்குள் செல்லக்கூடாதென்பதை சாஸ்திர யுக்தப்படி எம்மக்கள் ஒப்புக்கொண்டாலும், வர்ணாச்சிரம சாஸ்திரப்படி இப்போது தீண்டாதார் என்று கருதப்பட்டு இருக்கிறவர்கள் மட்டும் சண்டாளர்கள் என்று சொல்வது பொருந்தாது. எல்லா ஜாதிகளிலும் சண்டாளர்கள் பெரும்பான்மையோர்கள் இருக்கிறார் களென்றுதான் ஏற்படுகிறது. வர்ணாச்ரமதர்மத்துக்கு விரோதமாய் தாங்கள் செய்யவேண்டிய தொழில்களைவிட்டு வேறு தொழில் செய்பவர்கள் சண்டாளர்கள் என்று சாஸ்திரங்களில்சொல்லப்பட்டு இருப்பதால், தீண்டப்படாதவர்களைவிட மற்ற ஜாதிகளில் சண்டாளர்கள் அதிகமாக இருக்கின்றனர் என்று வியக்தமாய் புலப்படுகிறது. வேதநெறி தவறிய பிராம்மணனும் சண்டாளன் என்று வேதத்தில் சொல்லப்படும்போது, அத்தகைய பிராம்மணன் மட்டும் கோயிலில் பிரவேசிக்க உரிமையுண்டு என்று சொல்ல என்ன ஆதாரமிருக்கிறது? வேதத்தில் சொல்லப்பட்டது நான்கு ஜாதியே ஒழிய பஞ்சமஜாதி என்றாவது, நீசஜாதி என்றாவது, தீண்டப்படாதஜாதி என்றாவது ஜாதிகளிருப்பதாய் வேத, ஆகம யாஸ்திரங்களில் சொல்லப்படுவதில்லை. எம்மக்களும் நம்மை தெரிசிக்க நமது ஆலயங்களில் பிரவேசிக்கும்படியே நாம் விரும்பும்

போது நமது சொத்துக்களை தங்கள் சொத்தைப்போப் அநு பவித்துவரும் சுயநல வாதிகளான மடாதிபதிகள், சங்காரச்சாரியார் கள், ஆலய நிர்வாகிகள், ஆலய சிப்பந்திகள் முதலியோர்கள்மட்டும் தீண்டப்படாதவர்கள் நமது ஆலயங்களில் பிரவேசிக்கலாகாதென்று தடுப்பது நியாயமாகுமா? "காதல், களவாடல், கள்ளுண்டல், பொய்மொழிதல், ஈதல்மறுத்தல்". ஆகிய இவைகளை செய்பவர் கள் சண்டாளர்கள் என்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கும் போது, நமது ஆலயங்களில் பிரவேசிப்பவர்கள் பெரும்பாலும் சண்டாளர்களாகவே இருக்கையில், தீண்டப்படாதவர்கள் எனக்கருதப்படுவோர்களைமட்டும் நமது ஆலயங்களில் செல்லக் கூடாது என்று சொல்வது பொருத்தமாகுமா? அல்விதம் அவர் களை தடுப்பதற்கு எவர்க்கேனும் உரிமை உண்டா? நமது ஆலயங் கள் எவர்க்கும் பொதுவாய் தொழுகைக்காக ஏற்பட்டதேயொழிய சிலர்களுக்கு மட்டும் ஏற்பட்டதென்று சொல்வது மடமை யென்பதை எம்மக்களும் உணரவேண்டியதேநியாயம். "ஆவியோடு காயம், அழிந்தாலும் மேதினியில், பாவியென்றநாமம் படையாதே" என்ற ஆன்ரோர் பழமொழிப்படி நமது ஆலயங்களில் வந்து சுவாமி தெரிசனம் செய்து ஆத்மலாபம் பெறக்கருதும் மக்களில் எவரையேனும் தடைசெய்யும் பஞ்சமா பாதகர்களுக்கு நல்லறிவு ஏற்படவேணுமாய் நாம் அருள்புரிய வேண்டும்! எனது ஆலய மாகிய காசி க்ஷேத்திரத்தில் எம்மக்களும் பிரவேசித்து தெரிசிக்க உரிமை இருப்பதாலன்றோ புனித க்ஷேத்திரங்களில் முதன்மை பெற்றிருக்கிறது (கரகோஷம்.)

தவிர மக்களில் உயர்வு தாழ்வு ஏற்படுத்திக்கொள்வதற்கு ஆதாரமாய் சில ஆபாஸகட்டுக்கதைகளை உண்டுபண்ணியிருப்பதை நான் முன்னமே தெரிவித்துமிருக்கிறேன். என்றாலும் அதன்படி மக்களில் மக்கள் உயர்ந்தோர் உண்டென்று அக் கட்டுக்கதைகள் மூலமாயாவது ருசுவிட இயலுமா என்று கேட்கிறேன். அதாவது மக்கள் பலரும் ஆதியில் பிர்மா என்ற ஒருவரிடம் உற்பவமான பிர்மாவின் புத்திரர்கள் என்று ஒப்புக்கொள்ளுகிறதிலும்,

சிலர் பிர்மாவின் முகத்தில் பிறந்தவரென்றும், சிலர் புஜத்தில் பிறந்தவரென்றும், சிலர் வயிற்றில் பிறந்தவர்களென்றும், பலர் பாதத்தில் பிறந்தவர்களென்றும் ஓர் சாரார்கள் சொல்லி முகத்தில் பிறந்தவர்கள் உயர்ந்தவர்களென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். பிர்மாவுக்கு மேற்சொன்ன நாலு இடங்களிலும் யோனிவாய் ஏற்பட்டு அதன்மூலம் பிறந்தார்களா' அல்லது எப்படியென்று சீர்திருத்தக்காரர்கள்வினவினால் பதில்சொல்ல ஆஸ்திகர்களென்று சொல்லிக்கொள்ளும் எவர்க்கும் திறமையில்லை (சிறிப்பு) அல்லது மேற்சொன்ன நால்வர்களும் வேறு எந்தப்பெண்ணுடனாவது சம்மந்தப்பட்டு பிறகு மக்கள் உற்பத்தியானார்களா? அல்லது அப் பிர்மாவைப்போலவே அவர்கள் தேகத்திலும் யோனிவாய் ஏற்பட்டு மக்கள் உற்பத்தியாயிருக்கிறார்களா என்று கேட்கின்றேன். பெண்களின்றி மக்கள் உற்பத்தியாகுதல் இயற்கைக்குப் பொருந்துமா? தவிரவும் அப் பிர்மதேவனுக்கு ஓர் பாரியாள் சரஸ்வதி என்ற பெண் ஏற்பட்டிருப்பதாயும் சொல்லுகிறார்களே, அந்தம்மாளுடன் பிர்மதேவன் சம்மந்தப் பட்டு.யாராவது பிறந்திருக்கிறார்களா என்ற விபரம் எக்கட்டுக் கதைகளிலும் புலப்படவில்லை. இவைகளுக்கெல்லாம் ஓர் சமாதானம் சொல்லாமலே மேல்கண்டவைகள் சுத்த அபாண்டம் என்று மக்கள் அறிந்துகொள்ளும்படி பற்பல சமயங்களில் சில சீர்திருத்தக்காரர்கள் தோன்றி, மக்களுள் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்பது கிடையாது என்பதற்கு பல ஆதாரங்களையும் அனுபவங்களையும் எடுத்துப் போதித்திருக்கிறார்கள். அவைகளில் சிலவற்றை என் ஞாபகத்தில் வந்தமட்டில் நான் உங்களுக்கு நினைப்பூட்டுகின்றேன். அவர்களெல்லாம் ஜாதி வேற்றுமையே கிடையாது என்றும், ஜாதி வேற்றுமையால் மக்கள் ஒற்றுமைக் குறைந்து சுயராஜ்யம் பெறாமல் அடிமைப்பதவியிலிருப்பதாயும், ஜாதி வேற்றுமை ஒழிந்தால்தான் மக்கள் சுகம்பெறலாமென்றும், அவ்வேற்றுமை ஒழியும்வரையில் நாட்டுக்கு நலம்விளைதல் அரிது என்றும் சாங்கோபசாங்கமாய் கூறியிருக்கிறார்கள் அவர்களாவன:

திருவள்ளுவர், நால்வர், ஆழ்வார், தாயுமானவர், பட்டிணத்தார், அருணகிரியார், விவேகாநந்தர், ராமலிங்கஸ்வாமிகள், ராமானுஜாசாரியார், ஆதிகுரு சங்கராச்சாரியார், பதினெண்சித்தர்கள், மகாத்மாகாந்தி முதலியோர்கள் என் நினைவுக்கு வந்த மட்டில் உங்களுக்கு சொல்ல நேர்ந்தது. பிர்மதேவனுக்கு ஆதியில் ஐந்து தலை இருந்ததில் பரமசிவன் ஒரு தலையை கிள்ளி விட்டாரென்றும், அதற்கு ஆதாரமாய் பமரசிவனுக்கும் ஐந்து தலை பிர்மதேவனுக்கும் ஐந்துதலை இருந்ததால் பரமசிவன் மனைவியான பார்வதிக்கு தன் புருஷன் அடையாளம் தெரியாமல் போய்விடுகிறதென்று சொன்னதால், பிர்ம்மதேவனின் ஒரு தலையை மட்டும் பரமசிவன் கிள்ளிவிட்டாரென்று காரண ஆதாரங்களுடன் சொல்லும் மடையர்களின் செயல் எத்தகையது, முப்பத்துமூன்றுகோடி ஜனங்கள்கொண்ட நம் இந்திய மக்களுக்கு ஒரே தலைதான் இருக்கிறது. அப்படிக்கிருக்க அவர்களை அவரவர்களின் பெண்ஜாதிகள் சுலபமாய் கண்டு கொள்ளும்போது, கடவுளென மதிக்கும் பெண் கடவுளாகிய பார்வதிக்கு ஆண் கடவுளான தன் புருஷன் பரமசிவன் அடையாளம் தெரியாமல் போய்விட்டதென்றால் இதனை எம்மடையர்கள் ஒப்புக்கொள்ளுவார்கள். இத்தகைய எத்தனையோ மூட நம்பிக்கைகளை மக்கள் நம்பும்படியாய் நம்மையும், சாஸ்திரங்களையும் மக்களில் துரோகிகள் ஏற்படுத்தி இருக்கின்றனரென்பதை உணர்ந்து, மக்கள் தீவிர முயற்சியுடன் நம்மையும் நமது கோவில்களையும் வேதம், ஆகமம், சாஸ்திரம், புராணம், இதிகாசம் முதலிய கட்டுக்கதைகளையும் சீர்திருத்தவோ, அல்லது நாசம் செய்யவோ ஏற்பாடு செய்தால் மக்கள் சுயராஜ்யம் அடைய லாயக்குள்ளவர்களாவார்கள். இந்தியா விடுதலையடைந்து மக்கள் சுகமாய் வாழ்வார்கள். அவ்விதம் செய்யவேண்டியது மக்களின் கடமை என்பதே எனது அபிப்பிராயம். காலதாமதத்தை முன்னிட்டு இத்துடன் என் சொற்பொழிவை நிறுத்துகின்றேன். சுபம்!

பழமையானது!

முற்றிலும் முதன்மை வாய்ந்தது!!!

# P. N. ராஜன்

## சிவபுரி புகையிலை.

### மணக்கரை.

---

விலையுயர்ந்த அதிக குணமுள்ள சிவபுரி புகையிலை மணம், குணம், காறம், வாடை, அம்ஸம் நிறைந்ததாக சிறிய பாக்கெட்டுகளாக தயாரித்து விற்பனை செய்து வருகிறோம். P. N. ராஜன் சிவபுரி புகையிலை மணக்கரை என்று விலாஸமிட்டதை வாங்கி ஒரு முறை பரீக்ஷியுங்கள் உண்மை விளங்கும்.

பாக்கெட் 1க்கு விலை காலணா.

வியாபாரிகள் சரச விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்.

**P. N. ராஜன்**

சிவபுரி புகையிலை வியாபாரம்,<br>
மணக்கரை, புள்ளமங்களம் Post,<br>
திருகாட்டியத்தாங்குடி S. I. R.

---

# ரெத்னு

## கல்நார் பற்பொடி.

வைத்திய சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்பட்டது.

சகல தந்தரோகங்களையும் நிவர்த்திக்க வல்லது.

பாக்கெட் 1க்கு அணா 0—1—0.

**V. ரெத்னு கம்பெனி,**

தாகை வெளிப்பாளையம்.

உ

உலகப்பிரசித்திபெற்ற

கெட்ட ரசாயனங்கள் சம்பந்தப்படாத

# லில்லி சோப்.

குளிப்பதற்கும், ஆடைகளை வெளுப்பதற்கும்,

நிகரற்றது.

எல்லாவிடங்களிலும் கிடைக்கும்.

**R. கிருஷ்ணசாமி பிள்ளை,**

லில்லி சோப் பாக்ட்டரி,

நாகபட்டணம்.

---

நல்ல குணம், காரம், மணம் உள்ளதும்
திரேக சவுக்கியத்தையும், உற்சாகத்தையும் தறக்
கூடியதும், உயர்ந்த புகையிலையால் கைதேர்ந்த
வேலையாட்களைக்கொண்டு தயார்செய்திருக்கும்,

**M. K. V. வெற்றிவேல் பிள்ளை,**

**போட்டோ மார்க்கு.**



பீடிகளையே உபயோகியுங்கள்.

எல்லாவிடங்களிலும் கிடைக்கும்.

M. K. V. வெற்றிவேல் பிள்ளை,

பீடி பாக்ட்டரி,

வெங்காயகடை சந்து,

நாகபட்டணம்.